4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 623 /2022 நாள்: 04.03.2025 வா.சா.4 – ஆறுமுகம்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை -

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதிகள் அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் எனக்கு சிறுவயதில் இருந்தே பழக்கம். சொத்து செந்தில்குமாருக்கு எந்த வகையில் பாத்தியம் என்றால் அவருடைய தந்தை வழியில் அவருக்கு கிடைத்தது ஆகும். அதை அவர்கள் தனித்தனியாக பிரித்துக்கொண்டார்கள். எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியம் என்று அடமான ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அடமான ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டதை தவிர இதர விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிகள் தான் அடமான ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்யுமாறு அழைத்தார்கள் என்றால் சரிதான். வாதிகள் எனக்கு நீண்ட காலமாக பழக்கம் என்பதால் நான் வாதிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.